தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் 66 பேருக்கு நலத்திட்ட உதவிகள்

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 66 பேருக்கு அரசு நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி வழங்கினார். தேனி, பெரியகுளம், போடி ஆகிய வட்டாரங்களைச் சேர்ந்த 25 பேருக்கு கல்வி உதவித்தொகை, 15 பேருக்கு திருமண நிதி உதவி, 26 குடும்பங்களுக்கு ஈமக்கிரியை நடத்த நிதி உதவி வழங்கப்பட்டது. மாவட்ட வருவாய் அலுவலர் சீ. சோமுபாண்டியன், வேளாண்மை இணை இயக்குநர் திலகர், தோட்டக்கலை துணை இயக்குநர் ராஜன், வேளாண்மை விற்பனைக் குழு மேலாளர் முத்தையா, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ரங்கநாதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## மகேந்திரவாடியில் வேளாண் விழிப்புணர்வுப் பேரணி

கலவையில் உள்ள ஆதிபராசக்தி வேளாண்மை கல்லூரி சார்பில் வேளாண் விழிப்புணர்வுப் பேரணி அரக்கோணத்தை அடுத்த நெமிலிக்கு அருகில் உள்ள மகேந்திரவாடியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மகேந்திரவாடி அரசினர் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் பங்கேற்ற இந்த ஊர்வலத்தை பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆர்.ஜெயவேலு துவக்கி வைத்தார். இதில் கலவை ஆதிபராசக்தி வேளாண் கல்லூரி நான்காம் ஆண்டு மாணவிகள் தயாரித்த வேளாண் அபிவிருத்தி குறித்த வாசகங்கள் அடங்கிய அட்டைகளைப் பிடித்தபடி சென்ற பள்ளி மாணவிகள், கிராம மக்களிடையே துண்டுப் பிரசுரங்களையும் வழங்கினர். தொடர்ந்து பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கிராம விவசாயிகளிடையே செயல் விளக்கத்துடன் மாணவிகள் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

## விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம்

கரூர் மாவட்டத்தில் இதுவரை தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் வரும் 30,31-ம் தேதிகளில் நடைபெற

உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழக முதல்வரால் கடந்த 15.9.2011 அன்று தொடங்கப்பட்ட விலையில்லா வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வழங்கும் திட்டத்தில், கரூர் மாவட்டத்தில் 2011-12-ல் 1842 பேருக்கு 7,368 கால்நடைகளும், 2012-13-ல் 3,003 பேருக்கு 12,012 கால்நடைகளும், 2013-14-ல் 2,391 பேருக்கு 9,564 கால்நடைகளும் வழங்கப்பட்டுள்ளன. 2014-15-ல் 581 பேருக்கு 2,324 கால்நடைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த விலையில்லா வெள்ளாடுகள், செம்மறியாடுகளின் உற்பத்தித் திறனை பெருக்கவும், எடையை அதிகரிக்கவும், கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை மருந்தகம், கால்நடை கிளை நிலையங்களிலும் வரும் 30, 31-ம் தேதிகளில் வெள்ளாடு, செம்மறியாடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நடைபெற உள்ளது. இ6ந்த வாய்ப்பை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## <u>வறட்சியால் பாதிப்பு: வெற்றிலை கொடிக்கால் விவசாயிகளுக்கு எம்எல்ஏ நிதியுதவி</u>

வறட்சியால் பாதிக்கப்பட்ட வெற்றிலை கொடிக்கால் விவசாயிகள் மற்றும் மழையால் வீட்டை இழந்தவர்களுக்கு கிருஷ்ணராயபுரம் சட்டப்பேரவை உறுப்பினர் செ. காமராஜ் தனது 38-வது மாத ஊதியத்தை புதன்கிழமை வழங்கினார். இவர், தனது மாத ஊதியத்தை ஏழைகளுக்கும், நோய் மற்றும் விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வழங்கி வருகிறார். இவரின் 38-வது மாத ஊதியத்தை தனது தொகுதிக்கு உட்பட்ட கிருஷ்ணராயபுரத்தில் வழங்கும் நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது. இதில், மழையால் வீடுகளை இழந்த 3 பேருக்கு தலா ரூ. 5,000 வீதம் ரூ. 15,000 மற்றும் விபத்தால் பாதிக்கப்பட்ட நரிக்குறவர் இன மாணவிக்கு ரூ. 10,000, வறட்சியால் வெற்றிலை கொடிக்கால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் 6 பேருக்கு தலா ரூ. 5,000 வீதம் ரூ. 30,000 என மொத்தம் ரூ. 55 ஆயிரம் வழங்கினார்.

## <u>3.86 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி</u>

புதுக்கோட்டை மாவட்டத்தில் இதுவரை 3.86 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர் செ. மனோகரன். புதுக்கோட்டை நகர்மன்றத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் கோமாரி நோய்க்கான ஏழாவது சுற்று தடுப்பூசி முகாம் நடத்துவது

தொடர்பான விழிப்புணர்வு மற்றும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து அவர் மேலும் பேசியது: கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு வாயிலும், நாக்கிலும் கொப்புளங்கள் ஏற்பட்டு எச்சில் கம்பி போன்று வழிந்துகொண்டிருக்கும். காலின் குளம்பு பகுதியில் புண்கள் ஏற்பட்டு, கால் முழுவதும் வீக்கம் காணப்படும். இதனால் பாதிக்கப்பட்ட கறவை மாடுகளின் பால் உற்பத்தி குறைதல் மற்றும் சினை பிடிப்பதில் தாமதம் ஏற்படும். இளைப்பு ஏற்படுவதால் எருதுகளின் வேலைத்திறன் குறைவு, இளங்கன்றுகளின் உயிரிழப்பு போன்றவற்றைத் தடுக்க முறையாக கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவது அவசியம். இந்நோயைத் தடுக்கும் வகையில் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நமது மாவட்டத்தில் கோமாரி நோயைக் கட்டுப்படுத்த கடந்த மார்ச் மாதம் 6-வது சுற்றாக நடைபெற்ற முகாம்கள் மூலம் 3 லட்சத்து 86 ஆயிரத்து 623 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. அதேபோல் தற்போது 7 -வது சுற்று முகாம் கால்நடை பராமரிப்புத் துறையினரால் கோமாரி நோயைத் தடுக்கும் வகையில் வரும் 1-ம் தேதி முதல் 21-ம் தேதி வரை கால்நடைகளுக்கு இலவசத் தடுப்பூசி போடப்படும். இப்பணியில் 126 குழுக்கள் ஈடுபடுத்தப்பட உள்ளது. இத்தடுப்பூசி பணிக்கான உத்தேச செயல்திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது. இதன் விபரங்கள் அனைத்து ஊராட்சித் தலைவர்களுக்கும் தெரிவிக்கப்படும். இதன் விபரங்கள் பொதுமக்களை சென்றடையும் வகையில் அனைத்து ஊராட்சித் தலைவர்களும் தங்கள் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு கிராம சபா, ஒலிப்பெருக்கி, துண்டுப்பிரசுரம் வாயிலாக பிரசாரம் மேற்கொள்ள வேண்டும் என்றார். இதில் இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத் றை) மகாலிங்கம், உதவி இயக்குநர்கள் டேனியல் ராஜேந்திரன், சின்னதுரை, பின்டன், துணை இயக்குநர் (மாவட்ட கால்நடை பண்ணை) (பொ) நவநீதகிருஷ்ணன், பேராசிரியர், தலைவர் (கால்நடை பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையம்) பி.என். ரிச்சர்டுஜெகதீசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

# இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு விழிப்புணர்வு

வேளாண் துறை சார்பில் மாற்றி அமைக்கப்பட்ட பயிர் காப்பீட்டு விழிப்புணர்வு முகாம் பண்ருட்டியை அடுத்த தோட்டப்பட்டு, மருதாடு ஆகிய கிராமங்களில் அண்மையில் நடைபெற்றது. கடலூர் வட்டத்தில் நிகழாண்டில் சம்பா சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தாங்கள் பாடுபட்டதன் பலனை இயற்கை சீற்றங்களினால் இழக்காமல் இருக்க, மாற்றி அமைக்கப்பட்ட பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேரவேண்டி இந்த விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. முகாமுக்கு கடலூர் வேளாண் உதவி இயக்குநர் பொ.ஜெயக்குமார் தலைமை வகித்துப் பேசியது: ஆகஸ்ட் 1 முதல் நவம்பர் 30 வரை சாகுபடி செய்யும் நெற்பயிருக்கு இத்திட்டத்தில் காப்பீடு செய்யலாம். ஒரு ஏக்கருக்கு காப்பீட்டுத் தொகையான ரூ.5450க்கு 25 சதவீதம் ரூ.1363 பிரிமியம் செலுத்த வேண்டும். இதில் அரசு மானியம் ரூ.1022 போக விவசாயிகள் ரூ.341-ஐ பிரீமியமாக செலுத்தினால் போதும் என்றார். கிராமம் வாரியாக 4 இடங்களில் பயிர் அறுவடை செய்து சராசரி மகசூல் கணக்கிடுவது குறித்தும் முகாமில் விளக்கப்பட்டது. கடலூர் வேளாண் அலுவலர்கள் பூவராகவன், சசிக்குமார் ஆகியோர் இந்தத் திட்டத்தில் விவசாயிகள் சேர விண்ணப்பங்கள் நிறைவு செய்யும் முறை, வங்கி வரைவோலை எடுப்பது, தேவைப்படும் ஆவணங்கள், பயிர் அறுவடை சோதனை முறைகளை விவசாயிகளுக்கு விளக்கினர். நவம்பர் 30ஆம் தேதிக்குள் இத்திட்டத்தில் சேரவேண்டும் என்றும் அறிவுறுத்தினர். முகாமிற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் பிரபாகரன் செய்திருந்தார்.

## திருந்திய நெல் சாகுபடி; விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை

திருத்தணி : திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, இரண்டு ஏக்கருக்கு, 1,500 ரூபாய் ஊக்கத் தொகையாக, வேளாண் துறை வழங்குகிறது.திருத்தணி ஒன்றியத்தில், திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், இயந்திரம் மூலம் நடவு செய்வதற்கு அரசு ஊக்கத் தொகை மற்றும் மானிய விலையில் உரங்கள் வழங்கி வருகிறது. இதுகுறித்து, திருத்தணி

வேளாண் துறை அலுவலர் ஒருவர் கூறுகையில், 'இரண்டு ஏக்கர் நிலத்தில், நெல் பயிர் இயந்திரம் மூலம் நடவு செய்தால், 1,500 ரூபாய் ஊக்கத் தொகை, துத்தநாகம் சல்பேட் உரம், 50 சதவீதம் மானிய விலையில் வழங்குகிறது' என்றார்.மேலும், 'இந்த சலுகைகள் பெறுவதற்கு விவசாயிகள், தங்களது நிலத்தின் கணினி பட்டா அல்லது கிராம நிர்வாக அதிகாரியால் வழங்கப்பட்ட சிட்டா காண்பித்து மானியம் மற்றும் ஊக்கத்தொகை, திருத்தணி வேளாண் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்' என்றார்.

## கோமாரி நோய் விழிப்புணர்வு கூட்டம்

கடம்பத்துார் : கடம்பத்துாரில், நேற்று, கோமாரி நோய் குறித்து, ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் செயலர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. கடம்பத்துார் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடந்த கோமாரி நோய் விழிப்புணர்வு கூட்டத்திற்கு, ஒன்றிய குழு துணை தலைவர் சுதாகர் முன்னிலை வகிக்க, தலைவர் தட்சிணாமூர்த்தி தலைமை வகித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் கமலக்கண்ணன் வரவேற்றார்.விழிப்புணர்வு கூட்டத்தில், கால்நடை ஆய்வாளர் மோகன், கலந்து கொண்டு, கால்நடைகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுப்பது குறித்தும், கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட கால்நடை களுக்கு எவ்வாறு சிகிச்சை மேற்கொள்வது என்பது குறித்தும் விளக்கினார். மேலும், வரும் 1ம் தேதி முதல், 15ம் தேதி வரை நடைபெறும் கோமாரி நோய் சிறப்பு மருத்துவ முகாமில், தங்கள் ஊராட்சி பகுதிகளில் உள்ள கால்நடை களுக்கு பரிசோதனை மேற்கொள்ள அறிவுறுத்த வேண்டும் என, கேட்டுக் கொண்டார்.

## கோழி குஞ்சுகள் அமோக விற்பனை

மூங்கில்துறைப்பட்டு: மூங்கில்துறைப்பட்டு வாரச் சந்தையில் நேற்று கோழிக் குஞ்சுகள் விற்பனை நடந்தது. மூங்கில்துறைப்பட்டு வாரச் சந்தையில் தர்மபூரியில் இருந்து கொண்டு வரப்பட்ட கோழிக் குஞ்சுகளை 100 ரூபாய்க்கு பத்து என விற்றனர். மூங்கில்துறைப்பட்டு சுற்றியுள்ள கிராமங்களிலும் விற்றன. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஆர்வமாக கோழிக்குஞ்சுளை வாங்கிச் சென்றனர்.

## மார்க்கெட் கமிட்டிக்கு மக்காச்சோளம், கம்பு வரத்து

சின்னசேலம்: சின்னசேலம் மார்க்கெட் கமிட்டுக்கு மக்காச்சோளம், கம்பு நேற்று முன் தினம் வந்தது. சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று முன் தினம் மக்காச்சோளம் 100 மூட்டைகள் வந்தது. அதிகவிலை 1389 ரூபாய்க்கும், குறைந்தவிலை 1267க்கும் விலை போனது. கம்பு 5 மூட்டைகள் வந்தது. அதிகவிலை 1360ரூபாய்க்கும் குறைந்த விலை 1230 ரூபாயக்கும் விலை போனது. கடந்த வாரம் கமிட்டிக்கு மக்காச்சோளம் 120 மூட்டைகள் வந்தது. கொள்முதல் விலை 1லட்சத்து 37ஆயிரம் ரூபாய் மற்றும் கம்பு வருகை 5 மூட்டை கொள்முதல் 1800ரூபாய் ஆகும்.

**மரவள்ளிக்கிழங்கு விலை நிர்ணயம் வேளாண் வணிக அதிகாரி தகவல்**

நாமக்கல்: "ராசிபுரம் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் உற்பத்தியாளர் சங்கத்தில் இருந்து, விவசாயிகளிடம் மரவள்ளிக்கிழங்கு கொள்முதல் செய்யப்படும் விலை, ரகம் வாரியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது' என, நாமக்கல் வேளாண் துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் மாவட்டத்தில், முக்கிய தோட்டக்கலை பயிராக மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. கடந்தாண்டு 22 ஆயிரத்து 487 ஏக்கர் பரப்பில், கொல்லிமலை, சேந்தமங்கலம், ராசிபுரம் வட்டாரங்களில் பயிரிடப்பட்டது. அதில், கொல்லிமலை யூனியன் பகுதியில், மொத்த சாகுபடி பரப்பான 4,885 ஹெக்டரில், 1,400 ஹெக்டர் மரவள்ளி அறுவடை செய்யப்பட்டது. தற்போது, கொல்லிமலை வட்டாரத்தில் அறுவடை செய்யப்படும் மரவள்ளிக் கிழங்கில், 75 கிலோ கொண்ட மூட்டை, 400 முதல், 500 ரூபாய் வரை, விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. ராசிபுரம் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் உற்பத்தியாளர் சங்கத்தில் இருந்து, மரவள்ளிக்கிழங்கு கொள்முதல் செய்யப்படும் விலை விபரம் வருமாறு: மலைக்கிழங்கு ரகம், தலா ஒரு பாய்ன்ட்டுக்கு, 260 ரூபாய், முள்ளுவாடி ரகம், தலா ஒரு பாயின்டுக்கு, 270 ரூபாய், குங்குமரோஸ் ரகம், தலா ஒரு பாயின்டுக்கு, 280 ரூபாய், நாட்டு வெள்ளை ரகம், தலா ஒரு பாயின்டுக்கு, 280 ரூபாய் என்ற முறையில் கொள்முதல் செய்யப்படும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## தென்னை மரம் ஏறும் பயிற்சி முகாம்

ஆலங்குடி: ஆலங்குடி அருகே வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம் சார்பில், தென்னை மரம் ஏறும் பயிற்சியளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு, சான்றிதழ் மற்றும் பரிசு வழங்கும் விழாவுக்கு ஆராய்ச்சி மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜ்குமார் தலைமை வகித்தார். உதவிதிட்ட அலுவலர் பாரதிதாசன் வரவேற்றார். விழாவில், பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும், தென்னை மரம் ஏறும் கருவியும் வழங்கி, புதுவாழ்வு திட்ட மாவட்ட திட்ட மேளாலர் வசுமதி, சுகாதார ஆய்வாளர் ரமாராமனாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். உதவி மேலாளர் கலையரசி, உதவி பேராசிரியர் மாரிமுத்து உட்பட பலர் கலந்து கொண்டனர். கந்தசாமி நன்றி கூறினார்.

## பால் உற்பத்தியை அதிகரிக்க 800 பசு மாடுகள் வழங்க முடிவு

தஞ்சாவூர்: தமிழக அரசின் விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர் மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க, 800 கறவை மாடுகள் மற்றும் 25 ஆயிரத்து, 344 ஆடுகள் வழங்கப்பட உள்ளது. மாநிலத்தில் கிராமப் பகுதியில் வாழும் ஏழை, எளிய விவசாய கூலித் தொழிலாளர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும், தமிழகத்தில் பால் உற்பத்தியை அதிகரித்து வெண்மை புரட்சியை ஏற்படுத்தவும் ஏதுவாக, தமிழக அரசு கடந்த 2011ம் ஆண்டு முதல் விலையில்லா கறவைமாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு 1,800 பெண்களுக்கு, 62 கோடியே, 58 லட்சம் மதிப்பிலான, 1,800 கறவை மாடுகள் வழங்கப்பட்டது. இதனால் மாவட்டத்தில் பால் உற்பத்தி, 10 ஆயிரத்து, 800 லிட்டர் வரை அதிகரித்துள்ளது. அதுபோல நடப்பாண்டு 800 பெண்களுக்கு கறவை மாடுகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 50 பெண்களுக்கு கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளது. ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில், 17 ஆயிரத்து, 105 பெண்களுக்கு, தலா 4 ஆடுகள் வீதம், இரண்டு கோடியே, 19 லட்சம் ரூபாய் மதிப்பிலான, 68 ஆயிரத்து, 420 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு ஆறாயிரத்து, 336 பெண்களுக்கு தலா

நான்கு ஆடுகள் வீதம், 25 ஆயிரத்து, 344 ஆடுகள் வழங்கப்பட உள்ளன. மேலும், கால்நடைத்துறை மூலம் சிறப்பு முகாம் நடத்தி நான்கு லட்சத்து, 20 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி மற்றும் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

**<u>வேளாண் இணை இயக்குனர் தகவல் சம்பா மகசூல் அதிகரிக்க திருந்திய நெல் சாகுபடி அவசியம்</u>**

தஞ்சாவூர்: "நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெற திருந்திய நெல் சாகுபடி முறை அவசியம்,' என, தஞ்சாவூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சேகர் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: சம்பா நெல் சாகுபடியில், அதிக மகசூலை தரக்கூடிய திருந்திய நெல் சாகுபடி முறைக்கு, இளம் நாற்றுக்களை தயார் செய்வது முக்கியம். இதில், 14 நாட்களில் வாளிப்பான நாற்றுக்களை பெற, திருத்தியமைக்கப்பட்ட பாய் நாற்றங்கால் அமைக்க வேண்டும். நல்ல வடிகால் வசதியுடன், நீர் ஆதாரத்துக்கு அருகில் நாற்றங்காலை அமைக்க வேண்டும். ஒரு ஏக்கர் நடவு செய்ய தேவையான, இரண்டு கிலோ விதையை, 40 சதுர மீட்டர் பரப்பு நாற்றங்காலில் விதைக்க வேண்டும். பின், பூவாளியால் அடி வரை நனையும் அளவுக்கு தண்ணீர் தெளிக்க வேண்டும். விதைத்த பின் தென்னை ஓலை அல்லது வைக்கோலை கொண்டு, பாத்திகளை மூடிவிட்டு, எட்டு நாள் கழித்து, தென்னை ஓலை அல்லது வைக்கோலை நீக்க வேண்டும். தொடர்ந்து முதல், ஐந்து நாட்கள் வரை, பூவாளியால் தண்ணீர் தெளித்த பின், பாத்திகள் நனையும் வகையில், தண்ணீர் கட்ட வேண்டும். விதைத்த, 9வது நாள், 0.5 சத யூரியா கரைசலை, பூவாளி மூலம், மாலை வேளையில் தெளிக்க வேண்டும். 14வது நாளில், 12 முதல், 16 சென்டிமீட்டர் உயரமுடைய, 2 இலை கொண்ட வாளிப்பான இளம்நாற்றுகள் நடவுக்கு தயாராக இருக்கும். இவற்றை, குத்துக்கு, ஒரு நாற்று வீதம் முக்கால் அடிக்கு, முக்கால் அடி இடைவெளி விட்டு, வயலில் நடவு மேற்கொள்ள வேண்டும். மேட்டுபாத்தி நாற்றங்கால் தொழில்நுட்பங்களை பின்பற்றி அதிகளவு மகசூலை பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**காபி விவசாயிகளுக்கு மானிய தேதி நீட்டிப்பு**

தாண்டிக்குடி : காபி தோட்ட பணிகளை இயந்திர மயமாக்குதலுக்கான மானிய தேதி அக்., 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.காபி விவசாயிகள் தோட்ட

பணிகளுக்காக மானியம் பெறுவதற்கான கடைசி தேதி ஆக.,18 என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. விவசாயிகளின் நலன் கருதி வரும் அக்.,31 வரை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. காபி விவசாயிகள், நீட்டிக்கப்பட்ட தேதிக்குள் இயந்திரங்களை வாங்கி மானியம் பெற்று பயனடையுமாறு வத்தலக்குண்டு முதுநிலை காபி வாரிய தொடர்பு அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர். முழு விபரம் மற்றும் மானியம் தொடர்பான தகவல்களை தெரிந்து கொள்ள அருகிலுள்ள காபி வாரிய அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம்.

**<u>கிராம விவசாயிகளுக்கு செயல் விளக்க பயிற்சி</u>**

திண்டுக்கல் : திருச்சி மகளிர் தோட்டக்கலை கல்லூரி மாணவிகள் திண்டுக்கல் விவசாயிகளுக்கு செயல் விளக்க பயிற்சி அளித்தனர்.திருச்சி மகளிர் தோட்டக்கலை கல்லூரி மாணவிகள் திண்டுக்கல் மாவட்டம் காந்தி கிராமத்தில் உள்ள வேளாண் அறிவியல் மையத்தில் தங்கியிருந்து களப்பயிற்சி பெற்று வருகின்றனர். கன்னிவாடி மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களை பார்வையிட்டு பயிர் சாகுபடி, பூச்சி மேலாண்மை, மா, நெல்லியில் கவாத்து செய்யும் புதிய தொழில் நுட்ப முறை குறித்து பயிற்சி அளித்தனர். தென்னை மரம் ஏறும் பயிற்சியை பார்வையிட்டு அதற்கான ஆலோசனைகளை அதில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு அளித்தனர். ஏற்பாடுகளை ரெட்டியார்சத்திரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் சீனிவாசன் செய்திருந்தார்.

**<u>ஊடுபயிர் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்! வாழை சாகுபடி பரப்பும் அதிகரிப்பு</u>**

தேவதானப்பட்டி : பெரியகுளம் தாலுகா பகுதியில் தென்னை, வாழை சாகுபடியில் ஊடுபயிர் சாகுபடி அதிக அளவில் நடந்து வருகிறது. பெரியகுளம் தாலுகாவில் மேல்மங்கலம், குள்ளப்புரம், கீழவடகரை, கும்பக்கரை, வடுகபட்டி, ஜெயமங்கலம் ஆகிய பகுதியில் வாழை இலைக்காக தென்னை மரங்களுக்குள் வாழை சாகுபடி நடந்து வருகிறது. இதன் மூலம் விவசாயிகள் லாபம் அடைந்து வருகின்றனர். இந்நிலையில் 10 மாத பணப்பயிராக கருதப்படும் வாழை சாகுபடியின் பரப்வளவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதற்கு காரணம் வாழை தார் வெட்டிய பிறகு தொடர்ந்து 2 ஆண்டுகளுக்கு ஒரு நாள் விட்டு மறுநாள் இலை அறுவடை செய்யலாம். முகூர்த்த நாட்களில் வாழை இலைக்கு

நல்ல விலை கிடைத்து வருகிறது.இந்நிலையில் வாழை நடவு செய்து 3 மாதங்கள் வரை வாழைக்குள் ஊடுபயிராக குறுகிய காலப்பயிர்களை பயிரிட்டு பயனடையலாம். பெரியகுளம் தாலுகா பகுதியில் எண்டப்புளி, பெரியகுளம், தேவதானப்பட்டி ஆகிய பகுதியில் வாழை நடவு செய்தவுடன் குறுகிய கால பயிராக கருதப்படும் தட்டைப்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நடவு செய்த 50 நாளில் இருந்து 90 நாட்களுக்குள் அதன் பயனை அனுபவிக்கலாம். தற்போது பயிர்களை அறுவடை செய்து வருகின்றனர். இதன் மூலம் பெரியகுளம் தாலுகா பகுதியில் தென்னை, வாழை மரங்களுக்கு இடையில் ஊடுபயிர் சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**அணைகளின் நீர் மட்டம்..**

தேனி : பெரியாறு 125.30 (152) அடி, நீர் வரத்து 1002 கன அடி, நீர் வெளியேற்றம் 500 கன அடி. வைகை 51.38(71)அடி, நீர் வரத்து 199 கன அடி, நீர் திறப்பு 60 கன அடி. மஞ்சளாறு 38.60 (57)அடி,நீர் வரத்து 51 கன அடி, வெளியேற்றம் 8 கன அடி. சோத்துப்பாறை 43.62(126.28) அடி,நீர் வரத்து 3கனஅடி, வெளியேற்றம் 3 கன அடி.

**மாடுகளுக்கு "கானை' நோய் தடுப்பூசி இலவசம்! மாவட்டத்தில் செப்., 1 ல் துவக்கம்**

ராமநாதபுரம் : மாவட்டத்தில் நடப்பாண்டு 85,000 மாட்டினங்களுக்கு கால்நடை துறை சார்பில் செப்., 1 முதல் 21ம் தேதி வரை இலவசமாக கானை நோய் தடுப்பூசி முகாம் நடைபெறவுள்ளது.மாவட்டத்தில் விவசாயிகள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் நலன் கருதி ஆடு, எருது, பசு உள்ளிட்ட கால்நடைகளின் எண்ணிக்கையை பெருக்கும் வகையில் கால்நடை துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதில், சினை பிடிக்காத பசுக்களுக்கு சினை பிடிக்க வைப்பது; செயற்கை முறையில் கருவூட்டல்; குடல் புழு நீக்கம்; தடுப்பூசி போடுதல்; சினை பரிசோதனை போன்ற பல்வேறு பணிகள் கால்நடை உதவி மருத்துவர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெயில், மழை போன்ற பருவ நிலை மாறி வரும் போது கால்நடைகளுக்கு பெரும்பாலான நோய்கள் பரவுவது வழக்கம். இந்நிலையில், கால்நடை துறை சார்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவ்வப்போது தடுப்பூசி போடுவது வழக்கம். நடப்பாண்டு, 85,000 கால்நடைகளுக்கு இந்த தடுப்பூசி செப்., 1 முதல்

21ம் தேதி வரை இலவசமாக போட கால்நடை துறை முடிவு செய்துள்ளது. அதன்படி, மாவட்டத்தில் பணிபுரியும் கால்நடை மருத்துவர், உதவி மருத்துவர், கால்நடை ஆய்வாளர் மற்றும் பராமரிப்பு ஆய்வாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மண்டல இணை இயக்குனர்(கால்நடை துறை பாரமரிப்பு) கூடுதல் பொறுப்பு, எம். கன்னியப்பன் கூறியதாவது:குளம், குட்டைகளில் தேங்கியுள்ள கழிவு நீரை குடிப்பதால் கால்நடைகளுக்கு பொதுவாக கானை நோய் வர வாய்ப்பு உள்ளது. இந்நோய் பாதித்த ஆடுகள் உடல் மெலிந்து, சோர்வடைந்து காணப்படும். மேலும், வாயில் உமிழ் நீர் எப்போதும் வடிந்து கொண்டே இருக்கும். இந்நோய் பாதித்த ஆடுகள் உயிரிழக்கும் அபாயம் உள்ளது. எனவே, ஆறு மாதத்திற்கு ஒரு முறை முன்னெச்சரிக்கையாக மாட்டினங்களுக்கு வாய் மற்றும் கால் சுனை தடுப்பூசி போடப்படும். அந்தவகையில், செப். 1 முதல் 21ம் தேதி ஊசி போடப்படவுள்ளது. பிறந்து 6 மாதத்திற்கு குறைவான கால்நடைகளுக்கு இந்த ஊசி போடுவதில்லை, என்றார்.

## துவரை பயிரில் அதிக மகசூலுக்கு ஆலோசனை

சிவகங்கை : "சிவகங்கை வட்டார விவசாயிகளுக்கு துவரை சாகுபடி தொழில் நுட்ப செயல்விளக்க திடல் வழங்க உள்ளதாக," உதவி இயக்குனர் தனபாலன் தெரிவித்தார்அவர் கூறியதாவது: சிவகங்கை வட்டார விவசாயிகள், நீண்ட கால துவரை வகைகளை தேர்வு செய்து, ஆகஸ்ட்டிற்குள் நடவு செய்ய வேண்டும். 15க்கு 10 செ.மீ., அளவுள்ள பாலித்தீன் பையில், 4 துளைகள் இட்டு நிலத்தின் மண், மணல், தொழுஉரம் ஆகியவற்றை நிரப்பவேண்டும். விதைகளை 100 கிராம் ரைசோபியம் மற்றும் 100 கிராம் பாஸ்போபாக்டீரியா கொண்டு விதை நேர்த்தி செய்து விதைகளை பாலித்தீன் பையில் விதைக்க வேண்டும். நடவு செய்த, 20 முதல் 30 நாளில் ஒரு எக்டேருக்கு 25:50:25 கிலோ தழை மணி மற்றும் சாம்பல் சத்துக்கரை துவரை பயிரை சுற்றி இட வேண்டும். 30 முதல் 45ம் நாளில் நுனி வளர்ச்சியை தடுக்கவும், பக்க கிளைகள் அதிகம் விட்டு மகசூலை அதிகரிக்க நுனியை கிள்ளி விடவேண்டும். பூ உதிர்வை தடுக்க 0.5 மில்லி பிளோனோபிக்ஸ் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்கும் தருணத்தில் தெளிக்க வேண்டும். இத்தொழில்நுட்பத்தை கடைபிடித்து, துவரையில் அதிக மகசூல் பெறலாம், என்றார்.

## மானிய விலையில் விதைகள் தயார்

சிவகாசி : சிவகாசி வட்டாரத்தில் காரீப் மற்றும் ராபீப் பருவத்தில் விதைப்பதற்கு தேவையான நெல், கம்பு, பயறு மற்றும் பருத்தி விதைகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்க தேவையான அளவு இருப்பில் உள்ளது. அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, சைசோபியம் போன்ற உயிர் உரங்களும், பயறு நுண்ணூட்ட உரங்களும், ஜிப்சம் இருப்பில் உள்ளது. விவசாயிகள் தங்களுக்கு தேவையான இடுபொருட்களை சிவகாசி வேளாண்மை கோட்ட அலுவலத்தில் பெற்று பயனடையலாம் என வேளாண் உதவி இயக்குனர் பத்மாவதி கேட்டுக்கொண்டுள்ளார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## தமிழகத்தில் இன்று மழை பெய்யும்

சென்னை : வெப்ப சலனம் காரணமாக வளி மண்டல மேல் அடுக்கில் ஏற்பட்ட காற்று சுழற்சியால் தமிழகத்தில் இன்று பரவலாக மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென் மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் மழை பெய்து வரும் நிலையில் தமிழகத்தில் வட மாவட்டங்களில் கடந்த இரண்டு நாட்களாக மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக நேற்று நீலகிரி மாவட்டத்தில் 60 மிமீ மழை பெய்துள்ளது.இந்நிலையில் தமிழகத்தில் நேற்று வெப்ப சலனம் ஏற்பட்டு வங்கக் கடல் பகுதியில் வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி ஏற்பட்டுள்ளது.அதனால் இன்று தமிழகத்தில் பரவலாக மழை பெய்யும்

## துறையூரில் 10,723 கிலோ சின்ன வெங்காயம் ஏலம்

திருச்சி, : திருச்சி மாவட்டம் துறையூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் சின்ன வெங்காயம் மறை முக ஏலம் புதன்கிழமை தோறும் நடைபெற்று வருகிறது.நேற்று நடந்த மறைமுக ஏலத்தில் பால கிருஷ்ணபட்டி, நெட்டவேலவன்பட்டி, அழகரிபுரம், பி.மேட்டூர் ஆகிய ஊர்களில் இருந்து 317

மூட்டை சின்ன வெங்காயத்துடன் 35 விவசாயிகள் பங்கேற்றனர். அம்மாபாளையம், வேங்க டத்தனூர், லாடபுரம், துறையூர் ஆகிய ஊர்க ளில் இருந்து 7வியாபாரிகள் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர். மொத் தம் ரூ.1லட்சத்து 39ஆயி ரத்து 63 மதிப்பில் 10,723 கிலோ சின்ன வெங் காயம் ஏலம் போனது. இதில் தரமான வெங் காயம், அதிக பட்சமாக ஒரு கிலோ ரூ.18.50க்கும், சராசரியாக கிலோ ரூ.12க்கும் ஏலம் போனது. இடைத்தரகர்கள் இன்றி,கமிஷன் இல்லா மல் விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணம் பட்டு வாடா செய்யப்பட்டது. மேலும் அடுத்த வாரம் புதன்கிழமை தொடர்ந்து சின்ன வெங் காயம் ஏலம் நடை பெற உள்ளதால் இருப்பில் வைத்துள்ள விவசாயிகள், தங்களிடம் உள்ள சின்ன வெங்காயத்தை கொண்டு வந்து மறைமுக ஏலத்தில் கலந்து கொண்டு, வெங்காயத்திற்குரிய பணத்தை உடனே பெற்றுக் கொள்ள லாம்.

**<u>திருச்செந்துறை வணிக வளாகத்தில் ஒரு வாழைத்தார் ரூ.375க்கு ஏலம்</u>**

திருச்சி, : திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் நேற்று ஒரு வாழைத்தார் ரூ.375க்கு ஏலம் போனது.திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் ஸ்ரீரங்கம் திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் புதன்கிழமை தோறும் வாழைத்தார்கள் பொது ஏலம் விடப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி, திருச்சி மாவட்டம் குழுமணி, புலிவலம், லால்குடி, கொடியாலம் போசம்பட்டி, தொட்டியம், கிளியநல்லூர் ஆகிய இடங்களில் இருந்து விவசாயிகள் வாழைத்தார்களை லாரிகளில் கொண்டு வந்தனர். கரூர் மாவட்டம் குளித்தலை, திருச்சி, ஜீயபுரம், ஆகிய பகுதிகளில் இருந்து வியாபாரிகளும் வந்து இருந்தனர். பூவன், ரஸ்தாலி உள்ளிட்ட ரக வாழைத்தார்கள் ஏலத்திற்காக குவிந்தன. இந்த பொது ஏலத்தில் 322 வாழைத்தார்களுடன் 10 விவசாயிகள் பங்கேற்றனர். 9வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். மொத்தம் ரூ.31,691க்கு வாழைத்தார்கள் ஏலம் போனது. ஒரு வாழைத்தார் அதிக பட்சமாக ரூ.375க்கு ஏலம் போனது. இடைத்தரகர்கள் இன்றி, கமிஷன் இல்லாமல் ஏலத்தில் பங்கேற்ற விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

**<u>விதை கிராம திட்டத்தில் சான்று பெற்ற விதைகள் 50 சத மானியத்தில் விநியோகம்வேளாண் அதிகாரி தகவல்</u>**

திருச்சி, : விதை கிராம திட்டத்தில் சான்று பெற்ற விதைகள் 50 சதவீத மானியத்தில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக, வேளாண் அதிகாரி தெரிவித்தார். திருச்சி மாவட்டம் புள் ளம்பாடி ஆலம்பாடி கிராமத்தில் சம்பா நெல் சாகு படி முனைப்பு முகாம் ஊராட்சி மன்ற தலைவர் ராமநாதன் தலைமையில் நேற்று நடந்தது. இதில் திருச்சி மாவட்ட வேளா ண்மை துணை இயக்குனர் செல்வராஜ் கலந்து கொண்டு பேசுகையில், புள்ளம்பாடி வாய்க்கா லில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ள தால் டெல்டா விவசாயி கள் அனைவரும் சம்பா சாகுபடியை மேற் கொள்ள வேண்டும். நெல் விதை நேர் த்தி, பயிர் பாது காப்பு, திருந் திய நெல் சாகுபடி முறை, பார்த்தீனியம் களையை கட்டுப்படுத்திட தொழில் நுட்பங்களை கடைபிடிக்க வேண்டும் என்றார். வேளாண்மை உதவி இயக்குனர் மணிவண்ணன் பேசுகையில், ஏக்கருக்கு 20 கிலோ விதையுடன் அசோஸ் பைரில்லம், பாஸ்போபாக்டீரியா தலா ஒரு பாக்கெட் மற்றும் சூடோ மோனாஸ் 200 கிராம் கலந்து விதை நேர்த்தி செய்து 8 சென்ட் நாற்றாங்காலில் தெளிக்க வேண்டும். விதை கிராம திட்டத்தில் துவரை சிஓ (ஆர்ஜி) 7, உளுந்து வம்பன் 3, வம்பன் 5, எள் டிஎம்வி 4, டிஎம்வி 6, பச்சை பயறு வம்பன் 2 ஆகிய சான்று பெற்ற விதை கள் 50 சதவீதம் மான்ய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது.சம்பாநெல் சிஓ43 ரகத்தை சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவரும் கண்டிப்பாக சூடோ மோனாஸ் ப்ளூரோசன்ஸ் விதை நேர்த்தி செய்வது டன் பூக்கும் தருணத்திலும், பால் பிடிக்கும் தருணத்திலும் பிளாண்ட்டோமைசின் 60 கிராம் 200 லிட்டர் தண்ணீ ரில் கலந்து இரு முறை தெளிக்க வேண்டும். பார்த்தீனியகளை செடி பூக்கும் தருணத்திற்கு முன் ஒரு கிலோ சாதாரண கல் உப் பினை 10 லிட்டர் நீரில் கலந்து தெளித்து எளிதில் கட்டுப்படுத்தி விடலாம். இவற்றை வேறுடன் பிடுங்கி குழியில் இட்டு எரித்து விட வேண்டும் என்றார்.ஏற்பாடுகளைவேளாண் துணை அலுவலர் ரபிக் ஜான், வட்டார தொழில் நுட்ப மேலாளர் அன்பழ கன், உதவி வேளாண்மை அலுவலர்கள் செல்வம், சுதாகர் ஆகியோர் செய்திருந்தனர்.

**<u>பெரியாறு, வைகை நீர் மட்டம் உயர்வு 18ம் கால்வாயில் தண்ணீர் திறக்க வேண்டுகோள் விவசாயிகள் எதிர்பார்ப்பு 4,614 ஏக்கர் பயன்பெறும்</u>**

கூடலூர், : பெரியாறு, வைகை அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் 18ம் கால்வாயில் தண்ணீர் திறக்க வேண்டுமென விவசாயிகள் ஆவலுடன் காத்திருக்கின்றனர். இதன்மூலம் 4,614 ஏக்கர் பரப்புள்ள நிலங்கள் பாசன வசதி

பெறும்.உத்தமபாளையம், போடி வட்டத்திலுள்ள பெரும்பாலான விவசாயி களின் விவசாய நிலங்கள் மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் உள்ள மேட்டுப்பகுதியில் அமைந்துள்ளது. ஆற்றுப்பாசனம் கிடைக்க வழியில்லாத தால் இந்த நிலங்கள் மழையை நம்பியுள்ள மானாவாரி நிலங்களாக உள்ளன. இந்த நிலங்கள் பயன்பெறும் வகையில், லோயர்கேம்ப் தலை மதகில் இருந்து 40.80 கிமீ கால்வாய் வெட்டப்பட்டு, முல்லை பெரியாறு அணையில் நீர்மட்டம் உயரும்போது வெளியேறும் உபரி நீரையும், வெள்ள காலங்களில் மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து வரும் தண்ணீரையும் கூடலூர், கம்பம், பாளையம், தேவாரம் வழியாக சுத்தகங்கை ஓடைக்கு கொண்டு சென்று இணைக்கும் வகையில் 1999ல், ரூ.26.52 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட திட்டம்தான் 18ம் கால்வாய் திட்டம்.பெரியாறு மற்றும் வைகை அணையின் இருப்புநீர் 6,250 மில்லியன் கனஅடியாக இருந்தால், அரசாணைப்படி வினாடிக்கு 250 கனஅடி தண்ணீர் வீதம் 9 நாட்களில் 0.209 டிஎம்சி தண்ணீர் இக்கால்வாய் வழியாக வெளியேற்றப்படும். இத்தண்ணீர் மூலம் உத்தமபாளையம் தாலுகாவில் 10 கிராமங்களில் உள்ள 29 கண்மாய்கள், போடி தாலுகாவில் 3 கிராமங்களில் உள்ள 15 கண்மாய்கள் நிரப்பப்படும். இக்கண்மாய் நீரினால் உத்தமபாளையம் தாலுகாவில் 2568.90 ஏக்கர் நிலமும், போடிதாலுகாவில் 2045.35 ஏக்கர் என 4614.25 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். கடந்த 2010ம் ஆண்டு, பெரியாறு, வைகை அணைகளில் மழையினால் நீர்மட்டம் உயர்ந்ததால் 18ம் கால்வாயிலிருந்து விவசாயத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் 40 ஆண்டு காலமாக வறண்டு கிடந்த உத்தமபாளையம், போடி வட்டத்திலுள்ள ஏராளமான தரிசுநிலங்கள் விளைநிலமானதால் உணவு உற்பத்தி இருமடங்கானது. விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர். 2012-ல் பருவ மழை ஏமாற்றியதால் அணைகளிலும் நீர்மட்டம் உயரவில்லை. இதனால் 18ம் கால்வாயில் தண்ணீர் திறக்கப்படவில்லை. 2013ல் அக்.18 அன்று 18ம் கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த ஆண்டு, கடந்த சிலவாரங்களாக பெரியாறு நீர்பிடிப்பு பகுதியில் தொடர் மழை பெய்து அணைக்கு நீர்வரத்து அதிகமாகி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. நேற்றைய நிலவரப்படி பெரியாறு அணையின் நீர்மட்டம் 125.30 அடியாக உள்ளது. நீர்வரத்து வினாடிக்கு 1,002 கனஅடியாகவும், அணையிலிருந்து நீர் வெளியேற்றம் வினாடிக்கு 500 கனஅடியாகவும் இருந்தது. அணையின் இருப்புநீர் 3,683 மில்லியன்

கனஅடியாக உள்ளது.வைகையின் நீர்மட்டம் 51.38 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்தும் வினாடிக்கு 199 கனஅடியாகயாகவும், அணையிலிருந்து வினாடிக்கு 60 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் இருப்புநீர் 2,178 மில்லியன் கன அடியாக உள்ளது. தற்போது பெரியாறு, வைகை அணைகளின் இருப்புநீர் 6,000 மில்லியன் கன அடியை எட்டி வருகிறது. எனவே இத்தருணத்தில் 18ம் கால்வாயில் தண்ணீர் திறக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால், இப்பகுதியிலுள்ள தரிசு நிலங்கள் விளைநிலமாக மாறும் என்ற காத்திருப்போடு உள்ளனர் இப்பகுதி விவசாயிகள்.பயன்பெறும் 44 கண்மாய்கள்உத்தமபாளையம் வட்டம்: புதுப்பட்டி இடையன்குளம், அனுமந்தன்பட்டி வள்ளியம்மன்குளம், கோம்பை பண்ணைபுதுக்குளம், வண்ணான்குளம், பண்ணைப்பரம் ஜக்கையகவுண்டன்குளம், குள்ளமச்சான்குளம், தாதன்குளம், செட்டிகுளம், திருமலைக்கவுண்டன்குளம், காமாட்சிகுளம், சிந்தலச்சேரி சீதாகவுண்டன்குளம், அரசமரத்துக்குளம், நல்லு கண்மாய், கரிசல்குளம், சங்கராபுரம் வெம்பக்கோட்டைகுளம், லெட்சுமி நாயக்கன்பட்டி கணபதி செட்டிகுளம், வெம்பக்கோட்டை மாசானம்குளம், தேவாரம் சன்னாசி நாயக்கன்குளம், அழகிரிநாயக்கன்குளம், அழகிரிசெட்டிகுளம், பெரியதேவிகுளம், சின்னதேவிகுளம், பழனிச்செட்டிகுளம், கிருஷ்ணபதிகுளம், பெரியநாயக்கன்குளம், பொட்டிபுரம் எர்ணன்குளம், தமபிரான்குளம், கொட்டுக்காரன்குளம், திம்மிநாயக்கன்குளம்.போடி வட்டம்: டெம்புச்சேரி டொம்பிச்சியம்மன்குளம், நாகமலையான்குளம், போசிகண்மாய், சாமியகவுண்டன்குளம், கவுண்டன்குளம், அம்மன்குளம், வைரவ கவுண்டன்குளம், மீனாட்சிபுரம் செட்டிகுளம், மீனாட்சிபுரம் கண்மாய், கோடாங்கிபட்டி சோதரணைகுளம், சிறுகுளம், பெரியகுளம், குருவன்குளம், கணக்கன்குளம், கன்னிமார்குளம்.

## <u>கண்வலி கிழங்கு கொள்முதல் நிலையம் அமைக்க கோரிக்கை</u>

பழநி, : இந்து மக்கள் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் சிவக்குமார் தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில்,ஒட்டன்சத்திரம் பகுதி யில் மார்க்கம்பட்டி, எல்லப்பட்டி, சின்னக்காம்பட்டி, கள்ளிமந்தையம் மற்றும் பல கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் கண்வலி கிழங்கு செடி பயிரிடப்படுகிறது. இதற்கு மேலை நாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது.

இப்பகுதி விவசாயிகளால் டன் கணக்கில் கண்வலி கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டும் உரிய விலை கிடைக்காமல் ஏமாற்றம் அடைகின்றனர். எனவே, மார்க்கம்பட்டி அல்லது ஒட்டன்சத்திரம் பகுதியில் கண்வலி கிழங்கு கொள்முதல் நிலையம் அமைத்து, அரசே கொள் முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

**<u>பயறு வகைகளில் அதிக மகசூல் அள்ள டிஏபி கரைசல் வேளாண் அதிகாரிகள் ஆலோசனை</u>**

பழநி, : பயறு வகைகளில் அதிக விளைச்சல் பெற்றிட டிஏபி கரைசல் பயன்படுத்த வேண்டுமென வேளாண் அதிகாரிகள் ஆலோசனை வழங்கி உள்ளனர்.பழநி பகுதியில் 10 ஆயிரம் எக்டேருக்கு மேல் பயறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. மானாவாரியாக பயிரிடப்பட்டுள்ள பயறு வகைகளில் நல்ல தரமான மணிகளை பெற வேளாண் அதிகாரிகள் கூறியதாவது, தரமான பயிர்களை பெற்றிடவும், கூடுதல் மகசூல் பெற்றிடவும் டிஏபி கரைசலை இருமுறை தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 2 கிலோ டிஏபி உரத்தினை முதல் நாள் 10 லிட்டர் நல்ல தண்ணீரில் ஊற வைக்க வேண்டும்.மறுநாள் மாலை ஊற வைத்த கரைசலில் இருந்து தெளித்த நீரை வடித்து எடுத்து அதனை 190 லிட்டர் நல்ல தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலமாக பூக்கும் தருவாயில் ஒரு முறையும் மறுமுறை மேற்கூறிய முறையில் மீண்டும் 10 முதல் 15 நாள் இடைவெளியில் கைத் தெளிப்பான் மூலமாக 200 லிட்டரில் கலந்து தெளிக்க வேண்டும். அதன் மூலமாக அதிகப்படியான பூக்களும், திறட்சியான மணிகளும் நல்ல விளைச்சலும் பெறலாம்.தற்சமயம் டிஏபி கரைசல் விரிவாக்க மையத்தில் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றது. தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலரிடம் விண்ணப்பம் பெற்று வாங்கிக் கொள்ளலாம் வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**<u>பண்டிகை தினம் எதிரொலி பூக்களின் விலை கடும் உயர்வு கனகாம்பரம் ரூ.1400</u>**

திண்டுக்கல், : தொடர்ந்து பண்டிகை தினம் வருவதால் பூக்களில் விலை உயர்ந்து வருகிறது. கனகாம்பரம் கிலோ ரூ.1400க்கு விற்பனையானது. திண்டுக்கல் அண்ணா பூ மார்க்கெட்டுக்கு புகையிலைப்பட்டி, அனுமந்த

ராயன்கேட்டை, ஏ.வெள்ளோடு, ராஜக்காபட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து பூக்கள் வருகிறது. இங்கிருந்து கேரளா, பெங்களூர், மும்பை, மலேசியா உள்ளிட்ட பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. நாளை விநாயகர் சதூர்த்தி விழாவும், செப்டம்பர் 9ம் தேதி ஓணம் பண்டிகையும் கொண்டாடப்படுவதால் பூக்களின் விலை கிடு கிடு வென உயர்ந்துள்ளது. நேற்று கனகாம்பரம் கிலோ ரூ.1400, அரளி ரூ.300, மல்லிகை ரூ.1000, சாமந்தி ரூ.1000, சென்டுமல்லி ரூ.200, முல்லை ரூ.500, வாடாமல்லி ரூ.60, ஜாதி பூ ரூ.550 க்கு விற்றது. பூ வியாபாரி கண்ணன் கூறுகையில், தொடர்ந்து பண்டிகை தினங்கள் வருவதாலும் பூக்கள் வரத்து குறைவாலும் விலைகள் உயர்ந்துள்ளது. நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் டன் பூக்கள் வந்த நிலையில் தற்போது 5 ஆயிரம் டன் பூக்கள் மட்டுமே வருகிறது. வறட்சி காரணமாக உள்ளூர் பூக்களின் வரத்து பாதித்துள்ளது என்றார்.

## <u>பெதப்பம்பட்டியில் கொப்பரை ஏல மையம் அமைக்க வேண்டும்</u>

திருப்பூர், : மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் திருப்பூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் பாரிவேல், வேளாண்மை இணை இயக்குனர் சந்தானகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாவட்ட அளவிலான அனைத்துறை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். கூட்டம் துவங்கியதும் கடந்த கூட்டத்தில் வழங்கப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகள் தெரிவித்தனர். இதை தொடர்ந்து விவசாயிகள் பேசியதாவது:மனோகரன் (தமிழக விவசாயிகள் சங்கம்): பெதப்பம்பட்டியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், இடைத்தரகர்களிடமிருந்து விவசாயிகளை காப்பாற்ற அங்கு கொப்பரை ஏல மையத்தை தொடங்க வேண்டும். மூங்கில் தொழுவில் கால்நடைகள் ஏராளமாக உள்ளன. எனவே, இங்கு கால்நடை மருந்தகம் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஈஸ்வரமூர்த்தி: ஈரோடு மாவட்டத்தில் இருந்த தாராபுரம் பகுதி, தற்போது திருப்பூர் மாவட்டத்தில் இடம் பெற்றுள்ள நிலையில், ஒரே மாவட்டத்தில் இடம் பெற்றுள்ள உடுமலை, தாராபுரம் பகுதிகளுக்கு கால்வாய்க்கு ஒரே சமயத்தில் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடந்த கூட்டத்தில் கோரிக்கை விடுத்திருந்தேன், அதற்கு கலெக்டர் உரிய நடவடிக்கை

எடுத்துள்ளார். அதற்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். அமராவதி அணையில் இருந்து செப்., 17ம் தேதி பாசனத்திற்கு தண்ணீர் வழங்கினால், ஜனவரி, பிப்ரவரியில் மகசூல் நன்றாக இருக்கும்.பாலசுப்ரமணி: சாயக்கழிவு நீர் பிரச்னையால் விவசாய நிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக கரைப்புதூர் பகுதியில் சாயக்கழிவு நீர் பிரச்னை அதிக அளவில் உள்ளது. இப்பிரச்னையில் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளின் சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தமில்லாமல் உள்ளது.கோபால்: பல்லடம் பகுதியில் நிலத்தடி நீரை உறிஞ்சி, லாரிகள் மூலம் தண்ணீர் விற்பனை செய்வது, கடந்த ஒரு வார காலமாக அதிகரித்துள்ளது. குறிப்பாக எம்எல்ஏ கூறியும் விற்பனை தொடர்ந்து நடந்து வருகிறது.சின்னசாமி (தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்): ஊத்துக்குளி தாலுகா செங்கப்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் சுமார் 20 லட்சத்திற்கு மேல் மோசடி நடைபெற்றுள்ளது. இதில் நகை, பயிர் கடன், வைப்பு தொகை போன்றவைகளில் அதிகமாக மோசடி நடைபெற்றுள்ளது. சங்கத்தில் ஏழை, எளிய மக்கள் தான் தங்கள் நகைகளை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளனர். எனவே, அவர்கள் பெற்ற அசலையும், வட்டியையும் செலுத்த தயாராக உள்ளனர். ஆகவே, அசலையும், வட்டியையும் பெற்று கொண்டு, நகைகளை திருப்பித் தர வேண்டும். தற்போது மோசடி குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. விசாரணை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடைபெற வேண்டும்.நடராஜன் (பெருந்தொழுவு 11 கிராம நீரினை பயன்படுத்துவோர் சங்கம்): பரப்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்தில் பயன்பெறும் வகையில் பிரதான கால்வாய் பாசன பகுதிக்கு 7 நாட்கள் தண்ணீர் பாய்கிறது. எங்களது பெருந்தொழுவு கிளை வாய்க்காலில் 8 ஆயிரம் ஏக்கர் பிரித்து பாசனம் பெறுகிறது. ஒவ்வொரு ஆண்டுக்கும் 4 ஆயிரம் ஏக்கர் பிரித்து பாசனம் பெறுகிறது. எங்களது கால்வாய் பழைய ஆயக்கட்டை சேர்ந்தது. ஏற்கனவே 7 நாட்கள் பாசனம் பெற்று வந்தது. இப்போது மாதத்திற்கு 5 நாட்கள் மட்டும் வருகிறது. 7 நாட்கள் விட்டால் தான் குடிநீர் ஆதாரங்களையும், தென்னை மரங்களையும் காப்பாற்ற முடியும். பிரதான கால்வாயில் தண்ணீர் குறைந்தால் பெருந்தொழுவு கால்வாயில் மட்டும் தண்ணீரை குறைத்து, காங்கயம் கால்வாயில் விட்டு விடுகிறார்கள். எனவே எங்களுக்கும் ஒரே சீராக தண்ணீர் வழங்க ஆவண செய்ய வேண்டும். பொன்னுசாமி (மங்கலம் நீரினை

பயன்படுத்துவோர் சங்கம்): பரப்பிக்குளம் பாசன திட்ட தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடைபெறும் என தெரிகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் பாசன சபை தேர்தல் முறையாக நடத்தப்பட வேண்டும். இவ்வாறு விவசாயிகள் பேசினர்.

**<u>அனைத்து கிராமங்களிலும் கோமாரி தடுப்பூசி முகாம் செப்.1 முதல் துவக்கம் கால்நடை பல்கலை. பயிற்சி மையத் தலைவர் தகவல் தடுப்பூசி தவிர்க்கும் கால்நடைகள் எவை?</u>**

தடுப்பூசிகளை ஆரோக்கியமான கால்நடைகளுக்கு மட்டுமே போட வேண்டும். காலை வேளைகளில் ஒரே நேரத்தில் அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்புசி போடுவது சிறந்தது. நோய்வாய்ப்பட்ட கால்நடைகளையும், கன்று ஈனும் தருவாயில் உள்ள கால்நடைகளை தவிர்க்க வேண்டும்.: கோமாரி நோயை தடுக்க கரூர் மாட்ட கால்நடை பராமரிப்புத்துறையின் வாயிலாக அனைத்து கிராமங்களிலும் செப்.1ம்தேதி முதல் 21ம் தேதி வரை கால்நடைகளு க்கு இலவசமாக ஏழாவது சுற்று கோமாரி நோய் தடு ப்பூசி அளிக்கப்படுகிறது. கோமாரி நோய் தடுப்பு முறைகள் குறித்து கால்நடை மருத்துவ பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் அகிலா விடுத்துள்ள செய்திக்குறிப்பு: கோமாரி நோய் மாடு, எருமை, ஆடு, பன்றிகள் ஆகியவற்றை தாக்கி அதிக அதிளவிலான பொருளா தார இழப்பினை ஏற்படுத்தும் கொடிய நோயாகும். இந்த நோயை கிராமப்புறங்களில் கால்கட்டு மற்றும் வாய்ச்சப்பை என கூறுவதுண்டு. இந்த வியாதியானது பிக்கோர்னா எனப்படும் மிகச்சிறிய வைரஸால் ஏற்படுகிறது. அதிவிரைவில் பரவக்கூடிய இந்த நச்சுயுரி பிளவுபட்ட குளம்புகள் கொண்ட கால்நடைகள் அனைத்தையும் தாக்கக்கூடியது. நோயுற்ற கால்நடைகளுக்கு கடும் காய்ச்சல், வாய், நாக்கு, மடி, காம்பு மற்றும் குளம்புகளுக்கு இடையே கொப்பளங்கள் மற்றும் புண்கள் காணப்படும். நோயுற்ற கால்நடைகளின் உமிழ்நீர், சிறுநீர், பால், சாணம் மற்றும் உபயோகப்படுத்திய தண்ணீர், தீவனத்தொட்டிகள், தீவனம், காற்று மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பரவுகின்றன.நோய் தாக்குதலால் கறவைமாடுகளில் பால் உற்பத்தியும், எருதுகளின் வேலைத்திறனும் குறையும். கறவை மாடுகள் சினைப்பிடிப்பதும் தடைபடும். நோய் பாதிக்கப்பட்ட மாடுகளின் பாலை குடிப்பதன் இளம் கன்றுகளில் அதிகளவில் இறப்பு நேரிடும்.

கடுமையான நோய் கிளர்ச்சியால் 50 சதவீத அளவு மாடுகள் இறக்க நேரிடும். பாதிக்கப்பட்டு குணமடைந்த கால்நடைகளின் பால் உற்பத்தி திறன் குறைந்து விடும். கடந்த ஆண்டு இந்த நோய் தாக்குதலால் பல மாவட்டங்களில் கால்நடைகள் அதிகளவு பாதிக்கப்பட்டன.தடுப்பூசி மட்டுமே கால்நடைகளை நோயில் இருந்து காப்பாற்றும். நல்ல தரமுள்ள தடுப்பூசியை உரிய காலத்தில் கால்நடைகளுக்கு அளிப்பது அவசியமாகும். அதிக பொருளா தார இழப்பை ஏற்படுத்தும் கோமாரி நோயை தடுக்க கரூர் மாட்ட கால்நடை பராமரிப்புத் துறையின் வாயிலாக அனைத்து கிராமங்களிலும் செப்டம்பர் 1ம்தேதி முதல் 21ம்தேதி வரை கால்நடைகளுக்கு இலவசமாக ஏழாவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி அளிக்கப்படுகிறது. தடுப்பூசிகள் கால்நடை மருத்துவரால் மட்டுமே போட ப்பட வேண்டும். தடுப்பூசி போடும் போது கால்நடைகளுக்கு அயர்ச்சி ஏற்படக்கூடிய எந்த செயல்களையும் கையாளக் கூடாது. தடுப் பூசி ஒவ்வாமை ஏற்படும் போது உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும். பண்ணையாளர் கள் அனைவரும் தங்களின் கால்நடைகள் அனைத்துக்கும் தடுப்பூசி அளிக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்று கோமாரி நோய் தடுப்பூசியினை முன்னெச்சரிக்கையாக போட்டு பயன்பெற வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தடுப்பூசி போடு வதால் மாடுகளில் பாலின் அளவு குறைதலோ அல்லது வேறு சிரமங்களோ ஏற்படாது. ஒருவருடைய பண்ணையில் உள்ள கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் போதே அருகில் உள்ள மற்ற பண்ணையாளர்களையும் அறிவுறுத்தி அவர்களுடைய கால்நடைகளுக்கும் தடுப்பூசி போ ட்டுக் கொள்வதன் மூலமே நோய் தாக்கத்தை தவிர்க்க முடியும். ஒரு கிராமம் முழுதும் ஒட்டுமொத்தமாக கால்நடை தடுப்பூசிகள் போடப்பட்டிருந்தால் நோய் தாக்கமே இருக்காது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>கம்பம் அருகே வேளாண்மை கண்காட்சி</u>

கம்பம், : கம்பம் அருகே சுருளிப்பட்டியில் மதுரை வேளாண்மை கல்லூரி மாணவிகளின் வேளாண்மை கண்காட்சி நடந்தது.கம்பம் அருகே சுருளிப்பட்டியில் நடந்த வேளாண்மை கண்காட்சியை கம்பம் வேளாண்மை உதவி இயக்குனர் அசோகன் துவக்கி வைத்தார். மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய இறுதியாண்டு மாணவிகள் கிராமப்புற வேளாண்மை பணி அனுபவ திட்டத்தின்படி கடந்த சில நாட்களாக கம்பம் ஒன்றியத்தில் உள்ள பல கிராமங்களில் பயிற்சி எடுத்து வந்தனர். கிராம தங்கல் திட்டத்தின்

நிறைவாக மாணவிகள் வேளாண்மை கண்காட்சியை கம்பம் அருகே உள்ள சுருளிப்பட்டியில் நடத்தினர். இதில் விவசாயம் சார்ந்த பயனுள்ள தகவல்களையும், மாதிரிகளையும் வைத்து புதிய தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு தெரிவித்தனர். ஏற்பாடுகளை மாணவிகள் நிரஞ்சனா, நித்யா, நிவேதாதேவி, பாவனா, பிரியங்கா, ராஜேஷ்வரி, ரஷ்சானா, ரோகிணி செய்திருந்தனர்.

## <u>மாவட்டத்தில் செப்1 முதல்21 வரை கால்நடைகளுக்கு வாய் கோமாரி பரவாமல் இருக்க தடுப்பூசி முகாம்</u>

சிவகாசி, : கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் கோமாரி நோய் பரவாமல் தடுக்க செப்டம்பர் 1 முதல் தடுப்பூசி போட மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை ஏற்பாடு செய்துள்ளது. இது குற¤த்து மாவட்ட கலெக்டர் ஹரிஹரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-கால் மற்றும் வாய் கோமாரி நோயானது கலப் பின மாடுகளை அதிகம் தாக்கும். இந்த நோய் கால் நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம், மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்தி வருகிறது. இந்நோயினால் மாடுகள் இறப்பு குறைவாக இருந்த போதும் கறவை மாடுகள¤ல் பால் உற்பத்தி குறைகிறது. கறவை மாடுகளின் சினைப்பிடிப்பு தடைபடுகிறது. இளஙகன்றுகள் இறபபது அதிகரிக்கிறது. மேலும் இந்நோய் குளிர் மற்றும் பனி காலங்களில் அதிகம் பரவுகிறது. குளிர் மற்றும் பனி அதிகம் உள்ள இடஙகளில் இருந்து வாங்கப்படும் மாடுகளில் இந்நோய் வேகமாக தாக்கும் இந்த மாடுகளுக்கு தடுப்பூசி போடுவது அவசியமாகும். இந்நோய் பாதிக்கப்பட்ட மாடுகளின் சிறுநீர், பால், உமிழநீர், சாணம் ஆகியவற்றால் மற்ற கால்நடைகளுக்கும் பரவுகிறது. விருதுநகர் மாவட்டததில் உள்ள அனைத்து கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களிலும் தேசிய கால் மற்றும் வாய் கோமாரி தடுப்பூசி திட்டத்தில் செப்டம்பர் 1 முதல் 21 ம் தேதி வரை தடுப்பூசி போடப் படும். மாவட்டத்தில் 2 லட்சத்து 23 ஆயிரத்து பசு மற்றும் எருமை மாடுகளுக்கு இந்த தடுப்பூசி போடப்படவுள்ளது. எனவே விவசாயிகள் 4 மாதங்களுக்கு மேற்பட்ட இளங்கன்றுகள், மற்றும் கால்நடைகளுக்கு கிராமங்களில் நடக்கும் முகாமில் தடுபூசிகளை போட்டு கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறி உள்ளார்.

**<u>செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில் 25 டன் வெங்காயம் ரூ2.5 லட்சத்துக்கு ஏலம்</u>**

பெரம்பலூர், : செட்டிகுளம் வெங்காய வணிகவளாகத்தில் 25 மெட்ரிக்டன் வெங்காயம் ரூ.2.5 இலட்சத்திற்கு ஏலம் விடப்பட்டுள்ளது என கலெக்டர் தரேஸ் அஹமது தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது: பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுக்கா, செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில் 26ம் தேதி செவ்வாய்க் கிழமையன்று திறந்தமுறைஏலம் நடைபெற்றது. இதில் பெருமத்தூர், இருர், ஆலத்தூர், லாட புரம், நக்கசேலம், சத்திரமனை, செட்டிக் குளம், நாட்டார்மங்கலம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 62விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தை திறந்தமுறை ஏலத்திற்கு கொண்டுவந்து விற்பனை செய்தனர்.செட்டிகுளம் மற்றும் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த 12 வியாபாரிகள் இந்த திறந்த முறை ஏலத்தில் கலந்துகொண்டனர். விவசாயிகள் கொண்டு வந்திருந்த 362 மூட்டை, அதாவது 25,059 கிலோ சின்ன வெங்காயத்தை வியாபாரிகள் ஏலத்தில் எடுத்தனர்.ஏலத்தில் பழைய பட்டறை வெங்காயம் அதிகப் பட்சமாக ரூ. 12 க்கும் புதிய வெங் காயம் கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.25.50க்கும், சராசரியாக கிலோ ஒன்று க்கு ரூ. 9.50க்கும் விலை போனது. இதன் மூலம் ரூ. 2 லட்சத்து 38 ஆயிரத்து 321க்கு ஏலம் மூலம் வெங்காயம் விற்பனை ஆனது. செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் செவ்வாய் மற்றும் வியாழக்கிழ மைகளில் திறந்தமுறை ஏலம் நடத்தப்படுகிறது. எனவே பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த வெங்காய சாகுபடியாளர்கள் தங்களது வெங்காய விளை பொருளை இன்று (28ம் தேதி) கொண்டுவந்து விற்பனைசெய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

**<u>தேனீ வளர்ப்பில் மகசூல் அதிகரிக்க ஏற்பாடு வேளாண் அதிகாரி தகவல்</u>**

அரியலூர், : தா.பழூர் வட்டாரத்தில் தேனீ வளர்த்தல் தொழிலில் விவசாயிகளுக்கு அதிக மகசூல் கிடைப்பதற்கான வழிமுறைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தா.பழூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பழனிசாமி கூறினார். அரியலூர் மாவட்டம் தா.பழூர் வட்டார வேளாண்மை துறை சார்பில் அட்மா திட்டத்ததில் தேனீ வளர்த்தல் குறித்து விவசாயிகளுக்கான ஆலோசனை குழு கூட்டம் தா.பழூர் வேளாண்

அலுவலகத்தில் நடைபெற்றது. வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பழனி சாமி தலைமை வகித்தார். அவர் பேசியதாவது: தா.பழூர் வட்டாரத்தில் தேனி வளர்ப்பதன் மூலம் பயிர்களின் மகசூலை அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அட்மா திட்டத்தின் மூலம் தேனீ வளர்ப்பு பற்றிய செயல் விளக்கம் தற்போது விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் 6 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு அதில் விதிமுறைகளுக்கு உட்பட்ட சிறந்த விவசாயிகள் 3 பேர் தேர்வு செய்யப்பட்டு பரிசு தொகை வழங்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார். இதைத்தொடர்ந்து, மதுரை மாவட்டம் கொண்டையம்பட்டியை சேர்ந்த ஜோஸ்பின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில், தா.பழூர் வட்டாரத்தில் தேனீ வளர்ப்பதன் மூலம் பயிர்கள் மகசூல் அதிகரிப்பதுடன் லாபகரமாக தேனும் அதிகளவில் உற்பத்தி கிடைக்கிறது என்றார். மேலும் விவசாயிகள் தேனீக்கள் வளர்க்கும் முறைகள் குறித்து அவர் செயல் விளக்கமாக செய்து காண்பித்தார். இந்நிகழ்ச்சியில், தோட்டக் கலை துறை வேளாண்மை உதவி அலுவலர் அண்ணாதுரை, சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் உமாசந்திரா, வேளாண் பொறியியல் துறை சார்ந்த இளநிலை பொறியாளர் கண்ணன் ஆகியோர் விவசாயிகளுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கினர். வேளாண் விற்பனை துறை உதவி அலுவலர் குமரபாண்டியன், கால்நடை துறை மருத்துவர் ஜெயந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக அட்மா திட்ட தொழில் நுட்ப மேலாளர் சகாதேவன் வரவேற்றார். இதற்கான ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன், அட்மா திட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் குமணன், உஷா ஆகியோர் செய்து இருந்தனர். முடிவில் தா.பழூர் வட்டாரத்தை சேர்ந்த 6 பேருக்கு தேனீ வளர்த்தல் பெட்டி வழங்கப்பட்டது.

## <u>காரைக்காலுக்கு வந்த காவிரி நீர் விவசாயத்துக்கு அமைச்சர் திறப்பு</u>

காரைக்கால், : காரைக்கால் வாஞ்சியாற்றுக்கு வந்த காவிரி நீரை, புதுச்சேரி வேளாண் அமைச்சர் சந்திரகாசு நேற்று விவசாயத்திற்கு திறந்து வைத்தார். காவிரி நீர்பரப்பில் அதிகப்படியான மழை பெய்ததையொட்டி, தமிழகத்திற்கு அதிகப்படியான உபரி நீர் வந்தது. இந்நீர், கடைமடை பகுதி விவசாயத்திற்காக கடந்த 14ந்தேதி கல்லணையில் திறக்கப்பட்டது. தமிழகத்தின் பல பகுதிகளை கடந்து, பேரளம் ஆண்டார் பந்தி வழியாக 22ம் தேதி மாலை 4 மணிக்கு

காரைக்கால் நூலாற்றின் தடுப்பணைக்கு காவிரி நீர் வந்தது. அதனை, தொகுதி எம்.எல்.ஏ சிவா மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் திறந்து வைத்தனர். அங்கிருந்து, காரைக்காலை அடுத்த நெடுங்காடு தொகுதிக்கு நேற்று முன்தினம் இரவு வருகை தந்தது.நெடுங்காடு தொகுதி விவசாயத்திற்கு, காவிரி நீரை திறந்துவிடும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. புதுச்சேரி வேளாண் அமைச்சர் சந்திரகாசு தலைமை தாங்கி திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், மாவட்ட கலெக்டர் வல்லவன், பொதுப்பணித் துறை கண்காணிப்பு பொறியாளர் சண்முகசுந்தரம், செயற்பொறியாளர்கள் மாணிக்கவாசகம், ராஜசேகரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.தொடர்ந்து அமைச்சர் சந்திரகாசு கூறியது: நெடுங்காடு மற்றும் அதனை சுற்றியுள்ள 2,825 ஏக்கர் விவசாய நிலம் பயன்பெறும். முதல்வர் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகளின் முயற்சியால், காரைக்காலுக்கான முழு பங்கும் நமக்கு கிடைக்கும். கடந்த ஆண்டு நமது மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டபோது, உடனே கணக்கெடுப்பு நடத்தி, ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணத்தை முதல்வர் வழங்கினார். நடப்பாண்டு காலத்தோடு காவிரி நீர் வந்திருப்பதால், விவசாயிகள் அதிக அளவில் பயிர்செய்து பயனடைய வேண்டுகிறேன், என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>விளைச்சலால் வரத்து அதிகரிப்பு: சேலம் உழவர் சந்தைகளில் காய்கறிகளின் விலை சரிவு</u>**

விளைச்சலால் வரத்து அதிகரித்துள்ளதால் சேலம் உழவர் சந்தைகளில் காய்கறிகளின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. விலைசரிவு சேலத்தில் உள்ள உழவர் சந்தைகளுக்கு தற்போது வெளிமாவட்ட காய்கறிகளை காட்டிலும் விளைச்சல் காரணமாக உள்ளூர் காய்கறிகளின் ரத்து அதிகரித்து உள்ளது. இதனால் காய்கறிகளின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. சேலம், கருமந்துறை, ஓமலூர், காருவள்ளி, அயோத்தியாபட்டணம் உள்ளிட்ட பகுதியில் இருந்து தக்காளி வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் கடந்த வாரம் கிலோ ரூ.30 வரை விற்ற தக்காளி நேற்று ரூ.20–க்கு விற்பனை செய்யப்பட்டது. இதே போல்

வெண்டைக்காய் நேற்று ரூ.26–க்கும், அவரைக்காய் கிலோ ரூ.26–க்கும், பச்சை மிளகாய் கிலோ ரூ.28–க்கும், கேரட் கிலோ ரூ.34–க்கும், பீன்ஸ் கிலோ ரூ.36–க்கும், பாகற்காய் கிலோ ரூ.28–க்கும் விற்கப்பட்டது. இது கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் விலை குறைந்து உள்ளது.

<u>குறைய வாய்ப்பு</u>

கத்தரிக்காய் கிலோ ரூ.24–க்கும், உருளை கிழங்கு கிலோ ரூ.16–க்கும், புடலங்காய் கிலோ ரூ.20–க்கும், சின்னவெங்காயம் கிலோ ரூ.38–க்கும், பெரிய வெங்காயம் கிலோ ரூ.30–க்கும், முருங்கைக்காய் ஒரு காய் ரூ.2–க்கும் விற்பனை செய்யப்பட்டது. இதுகுறித்து விவசாயிகள் கூறும் போது, தற்போது உள்ளூர் காய்கறிகளின் வரத்து உழவர் சந்தைகளுக்கு அதிகரித்து உள்ளது. இதன் காரணமாக காய்கறிகளில் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. இதேபோல், வரத்து அதிகரித்தால் மேலும் காய்கறிகளின் விலை குறைய வாய்ப்புள்ளது' என்றனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>வாழையின் தரத்தை உயர்த்த இலைவழி நுண்ணூட்டங்கள்</u>**

முக்கனிகளில் ஒன்றான வாழையானது தமிழகம் முழுவதும் சாகுபடி செய்யும் பழப் பயிர்களில் மிக முக்கியமானது. உரங்களை சரியான தருணத்தில் அளித்த போதிலும் வாழையில் எதிர்பார்த்த தரம் மற்றும் மகசூல் பெற முடியாமல் பல விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். வாழைக்கு தேவையான அளவுக்கு நுண்ணூட்டச் சத்துக்கள் கிடைக்காததே இதற்கு காரணம். நுண்ணூட்டங் களான மக்னீசியம், துத்தநாகம், இரும்பு மற்றும் போரான் போன்றவை வாழையின் தரத்தை உயர்த்துவதில் பெரும் பங்காற்றுகின்றன. தண்டுகள் மெலிந்து காணப்படுதல், நுனி இலைகள் வெளுத்து காணப்படுதல், காய்கள் குட்டையாகவும் வளைந்தும் ஒல்லியாகவும் உருவாகுதல், பூ மற்றும் இலைகள் உருவாவது தாமதமாதல், பழங்கள் திரட்சி அடையாமல் காணப்படுதல்

போன்றவை இத்தகைய நுண்ணூட்டப் பற்றாக்குறையால் பயிரில் ஏற்படும் அறிகுறிகளாகும். இத்தகைய குறைபாடுகள் பொதுவாக நான்கு மாதங்களுக்கு மேல்தான் பயிர்களில் தென்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் நுண்ணூட்டங்களை மண் மூலம் பயிருக்கு வழங்குவதை விட இலையில் தெளிப்பதன் மூலம் பயிர்கள் விரைவாக நுண்ணூட்டங்களை எடுத்துக் கொள்கின்றன. இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையமானது இத்தகைய நுண்ணூட்டங்கள் ஒன்றாக கிடைக்கும்வகையில் வாழைக்கென சிறப்பு நுண்ணூட்ட கலவையினை கண்டுபிடித்துள்ளது. இந்தக் கலவையில் 50 கிராம் எடுத்துக்கொண்டு 10 லிட்டர் தண்ணீரில் கரைக்க வேண்டும். அதில் ஏதேனும் ஒரு ஒட்டும் திரவம் மற்றும் 2 எலுமிச்சை பழத்தின் சாறுகளை சேர்க்க வேண்டும். இந்தக் கலவையை வாழையின் இலைகளில் தெளிக்க வேண்டும். 5-வது மாதம் தொடங்கி 10- வது மாதம் வரை மாதம் ஒருமுறை இதனை தெளிக்கலாம். இதனால் நுண்ணூட்டக் குறைபாடுகள் விரைவில் களையப்படுவதுடன் அதிக எடை கொண்ட தார்கள் உற்பத்தியாகி அறுவடைக்கு கிடைக்கும். மேலும், எல்லா மரங்களிலும் ஒரே நேரத்தில் தார்களை அறுவடை செய்ய முடியும். இத்தகைய நுண்ணூட்டக் கலவையினை பயன்படுத்துவதன் மூலம் தரமான வாழைத் தார்கள் கிடைக்கின்றன.

தொடர்புக்கு: 98653 66075